THE SALVATION ARMY

INTERNATIONAL DAY OF

# GROW

CHILDREN & YOUNG PEOPLE 2024

## THEME OUTLINE

## **வளர்** கருப்பொருள் சுருக்கம்

2024 ஆம் ஆண்டிற்குரிய சர்வதேச குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தின கருப்பொருள் என்னவென்றால் **வளர்.**

## முகவுரை

“வளருங்கள்” என்ற கருப்பொருள் சுருக்கத்திற்கு உங்களை வரவேற்கிறோம்! இந்த சிறப்பு ஆவணம் கிறிஸ்தவர்களாகிய நமக்கு வளர்ச்சியையும் அதனுடைய அர்த்தத்தையும் விளக்குகிறது. வளர்ச்சி என்பது நம் வாழ்வின் ஒரு முக்கிய பகுதியாக நீங்கள் பார்க்கிறீர்கள். நாம் கடவுளைப் பின்பற்றி, அவரைப் பற்றி அதிகமாக அறிந்துகொள்ளும்போது, நாம் ஞானமாகவும், வலிமையாகவும், அதிக அன்பாகவும் மாறுவது தான் வளர்ச்சி என்பதாகும்.

இந்த ஆவணத்தின் உள்ளே, வளர்ச்சியைப் பற்றி கூறும் சில வேத வசனங்களை நீங்கள் பார்க்க முடியும். நாம் ஆவிக்குரிய ரீதியில் வளர என்ன தேவை, நாம் எவ்வாறு வளரலாம், ஆண்டவர் தம்முடைய ராஜ்யத்தை எவ்வாறு கட்டுவார் என்பதை அவை நமக்கு காட்டுகின்றன. வளர்ச்சி எவ்வாறு நம் வாழ்விலும் நம்மைச் சுற்றியுள்ள உலகத்திலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதைப் பார்ப்பது ஆச்சரியமாக இருக்கிறது!



இந்த வளருங்கள் கருப்பொருள் சுருக்கம் உங்களுக்கு உதவிகரமாகவும் மகிழ்ச்சியைத் தருவதாகவும் இருக்கும் என நம்புகிறோம். இது உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் வளர்ச்சியைப் பற்றி ஊக்குவிக்கவும், உங்களை சிந்திக்க வைக்கவும் மற்றும் உரையாடல்களை தொடங்கவும் வழி செய்கிறது. நாம் ஒன்றாக இந்தப் பயணத்தில் செல்லும்போது, வேதாகமத்திலுள்ள ஞானத்திற்கு நேராக நம் இதயங்களையும் மனதையும் திறப்போம். இது நமக்கு ஆண்டவர் விரும்பும் அற்புதமான மனிதர்களாக நாம் மாற உதவும்.

எனவே, வளர்ச்சியைப் பற்றிய அனைத்து அற்புதமான விஷயங்களையும் ஆராய்ந்து கண்டு மகிழ்வோம்! இது நம் வாழ்வில் நம்பமுடியாத விஷயங்களைச் செய்து, ஆண்டவர் நமக்காக வைத்திருக்கும் சிறப்புத் திட்டத்தை நிறைவேற்ற உதவும்.

## வளர்ச்சியை நிரூபிக்கும் வேத வசனங்கள்

**கொலோசெயர் 2:7**

அவருக்குள் **வேர்கொண்டவர்களாகவும்,** அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் **உறுதிப்பட்டு,** ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.




ஒரு மரம் வளர்ந்து கனி கொடுக்க அதற்கு வலிமையான வேர்கள் தேவைப்படுவதுபோல நாமும் நங்கூரமிடவேண்டும். ஆண்டவரின் அன்பும் உண்மையும் நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் நாம் செழிப்பதற்கு நமக்கு ஊட்டமளிக்கிறது. ஆண்டவரின் அன்பான மற்றும் நமக்குள் மாற்றத்தை ஏற்பாற்படுத்தும் வேலையை நாம் ஏற்றுக்கொள்வதன் மூலம், அவருடைய பரிசுத்த ஆவியின் மூலம், ஒரு நிறைவான நோக்கமுள்ள வாழ்க்கையில் நாம் வளருவோம். அதனுடைய இறுதி முடிவு? நன்றியுணர்வோடு நாம் நிரம்பி வழிவோம்.

**மத்தேயு 13:31-32**

*“வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோகராஜ்யம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது’ அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், **வளரும்போது**, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்.”*

ஆண்டவருடைய ராஜ்ஜியம் எவ்வாறு வளரும் என்பதை விளக்குவதற்கு இயேசு கடுகு விதையை குறித்த உவமையைக் கூறினார். அற்பமான துவக்குங்கள் குறிப்பிடத்தகுந்த விரிவாக்கத்திற்கு வழிவகுக்கும் என்பதை இந்த சிறிய கதை நமக்கு காண்பிக்கிறது. கடுகு விதையைப் போலவே, நமது விசுவாசம், கிரியைகள் மற்றும் சிறிய பங்களிப்புகள் இந்த உலகில் குறிப்பிடத்தக்க தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தும்.

**யோவான் 6:1-15 (5000 பேரை போஷித்தல், ஆதார வசனங்கள்)**

*'இவைகளுக்குப்பின்பு இயேசு திபேரியாக்கடல் என்னப்பட்ட கலிலேயாக் கடலின் அக்கரைக்குப் போனார்.2அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள்.3இயேசு மலையின்மேல் ஏறி, அங்கே தம்முடைய சீஷருடனேகூட உட்கார்ந்தார்.4அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது.*

*5இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி: ''இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார்''.6தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும், அவனைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார்.*

*7"பிலிப்பு அவருக்குப் பிரதியுத்தரமாக: இவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சங்கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும்'', இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான்.*

*8அப்பொழுது அவருடைய சீஷரிலொருவனும், சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி: 9''இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான்.''*

*10இயேசு: ''ஜனங்களை உட்காரவையுங்கள் என்றார்.'' அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருந்தது. பந்தியிருந்த புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள்.11இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்' சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்' அப்படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார்.*

*12அவர்கள் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ''ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார்''.13அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்.*

*14இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: ''மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்.''*

*15ஆதலால் அவர்கள் வந்து, தம்மை ராஜாவாக்கும்படிப் பிடித்துக்கொண்டுபோக மனதாயிருக்கிறார்களென்று இயேசு அறிந்து, மறுபடியும் விலகி, தனியே மலையின்மேல் ஏறினார்.'*

ஒரு சிறு குழந்தை 5000 க்கும் மேற்பட்ட மக்களை போஷிக்கும் ஒரு அற்புதத்தின் துவக்கமாக இருக்கும் என்று நீங்கள் எப்போதாவது நினைத்ததுண்டா? அனேகமாக நினைத்திருக்கமாட்டீர்கள். இந்தக் கதையில், நம்முடைய தாராள மனப்பான்மை மற்றும் நம்மிடம் இருக்கிறதை இயேசு பயன்படுத்த அனுமதிப்பதைப் பற்றிய உண்மையை விளக்குகிறார் (உண்மையாகவே சில நேரங்களில்!) நம்முடைய கைகளில்: அவர் அதை பெருக்குவார்! தேவனுடைய ராஜ்யத்தில், மிக அற்பமான வளம் கூட மிகுதியாக பலனை தரும்! மற்றவர்களுக்குச் சேவை செய்ய நம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து கொள்ள நாம் தயாரா? சிறிய திறமையை கூட கிரகிக்க முடியாத அளவுக்கு அதிகமாக மாற்ற முடியும் என்று இயேசு நமக்கு சவால் விடுவதோடு உறுதியுமளிக்கிறார்.




**எபேசியர் 4:14-16**

*14 நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும்*
*வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே*
*அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,*
*15 அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள்*
*எல்லாவற்றிலேயும், நாம்* ***வளருகிறவர்களாயிருக்கும்படியாக*** *அப்படிச்*
*செய்தார்.*
*16 அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல*
*கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு*
*அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது*
*அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச்*
***சரீரவளர்ச்சியை*** *உண்டாக்குகிறது.*

நாம் அனைவரும் உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் வளர விரும்புகிறோம். இந்த வேத வசனம் இயேசு கிறிஸ்துவைபோல் ஆவதற்கு நம்மை தூண்டி, இயேசு கிறிஸ்துவின் மீது கவனம் செலுத்தி நாம் வளர்வதற்கு உதவுகிறது.

ஆண்டவருக்காகவும் மற்றவர்களுக்காகவும் அன்பிலும் சேவையிலும் நாம் வளர முடியும். ஆனால் வளர்ச்சி என்பது குழுப்பணியை குறித்தது. நாம் தனிமையானவர்கள் அல்ல, ஆண்டவருடைய குடும்பம் மற்றும் அவருடைய ராஜ்ஜியத்தின் ஒரு அங்கம். ஒருவருக்கொருவர் வளர வேண்டியது நம்முடைய தேவையாயிருக்கிறது! மற்றவர்களுடைய வளர்ச்சிக்கு உதவதற்கும் அவர்களுக்கு சேவை செய்வதற்கும் உபயோகிப்படுகிற சிறப்பான தாலந்துகள் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த வசனம் கனடா மற்றும் பெர்முடா மாகாணம் உருவாக்கிய ‘வளர்’ என்ற நூலிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது 12-17 வயதுடைய பெண்களுக்கானது, ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழிகளில் கிடைக்கிறது. இதில் சிலவற்றை கலவையான குழுக்களுக்கும் கூட பயன்படுத்தலாம். தலைவருடைய வழிகாட்டுதல், பயிற்சி காணொளிகள் மற்றும் வளர் பாடத்திட்டங்களை பார்ப்பதற்கு https://salvationist.ca/womens-ministries/grow/ என்ற இந்த வலைத்தளத்தைப் பார்வையிடவும். இது பார்ப்பதற்கு தகுந்ததும், சிறப்பு வாய்ந்ததுமாகும்!.